**வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு**

**நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை**

**மின்னஞ்சல் முகவரி : info@cida.gov.lk**

**இணையதளம் : www.cida.gov.lk**

CIDA

# வெற்றிடங்கள்

**நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் கீழ் குறிப்பிடப்பட்ட பதவி வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

## 1. வழங்கல் அதிகாரி – (JM 1-2 ) – II தரம்

- **தகைமைகள் மற்றும் அனுபவம்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வழங்கல் சங்கிலி முகாமைத்துவம்/ வர்த்தக நிர்வாகம்/ வர்த்தக முகாமைத்துவம்/ கணக்கியல்/ நிதி முகாமைத்துவம்/ வர்த்தகம்/ விஞ்ஞானம் தொடர்பில் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேலுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவையான தகைமையை பூர்த்தி செய்திருத்தல்

**அல்லது**

2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் CIDA இல் முகாமைத்துவ உதவி (தொழில்நுட்பம் அல்லாதது) (MA 1-2) - II தரத்தின் பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

## 2. பராமரிப்பு அதிகாரி – (JM 1-2 ) – II தரம்

- **தகைமைகள் மற்றும் அனுபவம்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2 அல்லது 3)**

1. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட குறித்த துறையில் தேசிய தொழில் தகைமை (NVQ) 07 தரத்திற்கு குறையாத தேர்ச்சிச் சான்றிதழை பெற்றிருத்தல்.
2. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட குறித்த துறையில் தேசிய தொழில் தகைமை (NVQ) 06 தரத்திற்கு குறையாத தேர்ச்சிச் சான்றிதழை பெற்றிருத்தல் மற்றும் தகைமையை பெற்ற பின் அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு அங்கீகரிக்க முடியுமான தனியார் துறையின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் குறித்த துறையில் 05 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
3. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட குறித்த துறையில் தேசிய தொழில் தகைமை (NVQ) 05 தரத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழை பெற்றிருத்தல் மற்றும் தகைமையை பெற்ற பின் அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு அங்கீகரிக்க முடியுமான தனியார் துறையின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் குறித்த துறையில் 10 ஆண்டுகள் சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேலுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவையான தகைமையை பூர்த்தி செய்திருத்தல்

**அல்லது**

2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் CIDA இல் முகாமைத்துவ உதவி (தொழில்நுட்பம்) (MA 2-2) - II தரத்தின் பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

## 3. கணக்கு அதிகாரி– (JM 1-2 ) – II தரம்

- **தகைமைகள் மற்றும் அனுபவம்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி/ கணக்கியல்/ வர்த்தகம்/ கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவம்/ வர்த்தக நிர்வாகம்/ அரச நிர்வாகம்/ அரச முகாமைத்துவம் அல்லது முகாமைத்துவம் தொடர்பான பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

2. இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் (ICASL) இடைநிலை பரீட்சை அல்லது பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (CIMA)/ சான்று பெற்ற கணக்காளர் சங்கத்தின் (ACCA) I மற்றும் II பிரிவின் பரீட்சை ஒன்றில் சித்தி பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேலுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவையான தகைமையை பூர்த்தி செய்திருத்தல்

**அல்லது**

2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் CIDA இல் முகாமைத்துவ உதவி (தொழில்நுட்பம் அல்லாதது) (MA 1-2) - II தரத்தின் பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

**ஆட்சேர்ப்பு முறை:**

எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

**சம்பளக் குறியீட்டு மற்றும் மாதாந்த சம்பள அளவு:**

**கனிஷ்ட முகாமைத்துவ தரம்** - **JM 1-2 - 2025:** ரூபா **(74,010/- 10 x 1,360/- 18 x 2,040/- 124,330/-)**

(வெளிவாரியாக இணைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் சம்பள அளவின் ஆரம்பப் படியில் வைக்கப்பட்டுள்ளனர். முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 01/2025 இற்கு அமைய, உள்ளக சம்பள படியில் செலுத்தப்படும் சம்பளம் ரூபா 66,781/- என்பதோடு 2027.01.01 ஆம் திகதி செலுத்தப்படும் சம்பளம் ரூபா 74,010/- ஆகும்.)

**அனைத்து விண்ணப்பதாரர்களும்**

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. பதவியின் கடமைகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு மற்றும் நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

iii. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**வயது வரம்பு:**

- 22 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு மற்றும் தற்போது அரச/ சட்டரீதியான சபையில் கடமையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மேல் குறிப்பிடப்பட்ட உச்ச வயது பொருந்தாது.

**வேறு நன்மைகள்**

❖ அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்.

❖ ஊழியரின் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு நிறுவனத்தினால் 15% பங்களிப்பும், ஊழியரிடம் இருந்து 10% பங்களிப்புடனும் நிறுவனத்தினால் ஊழியருக்காக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% வீதமும் இடப்படும்.

❖ ‘‘அக்ரஹார தங்க’’ மருத்துவ காப்புறுதி வசதி நிறுவனத்தினால் பெற்றுத்தரப்படும்.

❖ அரச வர்த்தக திணைக்கள சுற்றுநிருபத்தின் மூலம் அவ்வப்போது திருத்தப்படும் முறைக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு மற்றும் மிச்சம் வைக்கப்பட்ட மருத்துவ விடுப்புக்காக பணம் செலுத்தப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

“விண்ணப்ப மாதிரியை” CIDA இணையதளத்தில் இருந்து (www.cida.gov.lk) தரவிறக்கம் செய்ய முடியும்.

விண்ணப்பதாரரின் சுயவிபரக்கோவை அடங்கிய, முறையாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, கல்வி மற்றும் தொழில், அனுபவம் தொடர்பில் உறுதி செய்யப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு 2026 மார்ச் 19 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவருக்கு கிடைப்பதற்கு வகை செய்தல் வேண்டும். அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான சபை/ நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள், தமது திணைக்களம்/ நிறுவன தலைவர்களின் பரிந்துரையுடன், அவர்கள் தேர்வு செய்யப்பட்டால் தற்போது வகிக்கின்ற பதவியில் இருந்து விடுவிப்பதற்கு முடியுமா என்பதைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

முழுமை பெறாத அல்லது தாமதித்துக் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகைமையை பூர்த்தி செய்திருக்கும் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**தலைவர்**

**நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை**

**“சவ்சிறிபாய” 123, விஜேராம மாவத்தை,**

**கொழும்பு 07.**